# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்டெம்பர் - 2014)

## HCS 3202 Women in Hindu Society

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. "வேத இலக்கியங்கள் பெண்மைக்கு முதன்மையளித்தவை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை மேல் வரும் தலைப்புக்களில் பரிசீலனை செய்க.

    அ. பெண் தெய்வங்கள்
    ஆ. பெண் புலமையாளர்கள்
    இ. குடும்ப வாழ்வில் பெண்கள்

02. "பழந்தமிழகத்தில் பெண்கள்" எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

03. "பல்லவர் காலப் பக்தி இயக்கச் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும்" இக்கூற்றினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

    அ. திலகவதியார்
    ஆ. பாண்டிமாதேவி
    இ. தேவரடியார்கள்

04. "இந்துத் திருமணச் சடங்கில் பெண்களின் இசைவும் பங்களிப்பும் முக்கியமான ஒன்றாக இருந்து வந்துள்ளது" இக் கூற்றினை பரிசீலனை செய்க.

05. " உலகில் மற்றைய பெண்களை விட இந்துப் பெண்கள் உயர்ந்த நிலையில் இருக்கின்ற மற்றொரு அம்சம் அவர்களது உரிமைகள். இந்தியாவில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு" என்று கூறிய சுவாமி விவேகானந்தரின் மேற்குறித்த கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

06. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு குறிப்புரை வரைக.

    அ. பாரதி பாடல்களில் பெண்ணுரிமை
    ஆ. இந்து சமயத்தில் சதி வழக்கு
    இ. சித்தர் நோக்கில் பெண்கள்
    ஈ. ஆண்டாள்